ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2117/12 - 2019 අප්‍රේල් මස 02 වැනි අඟහරුවාදා - 2019.04.02
*2117/12 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் வைத்தியசாலைகள் தரமுயர்த்தல்

*2017 ஆம் ஆண்டின் வரவு செலவு உரையில் முன்மொழியப்பட்டதன் பிரகாரம் இலங்கையின் மருத்துவக் கல்வியை விரிவாக்கும் நோக்கத்தில் இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் மற்றும் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் புதிய மருத்துவ பீடங்கள் 02 நிறுவப்பட்டன.*

புதிய பீடங்களின் மாணவர்களுக்கு உள்ளக பயிற்சிகள் வழங்குவதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இரத்தினபுரி மாவட்ட பொது வைத்தியசாலை (PGH) மற்றும் குளியாப்பிட்டிய ஆதார வைத்தியசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, பட்டப்பயிற்சி மற்றும் உயர் கற்கை பட்டப்பயிற்சிக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த இரு வைத்தியசாலைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் போதனா வைத்தியசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

| இலக்கம் | பல்கலைக்கழகத்தின் பெயர் | வைத்தியசாலையின் பெயர் | நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|---|
| 1. | இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம் | போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி | 2018.10.31 |
| 2. | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | போதனா வைத்தியசாலை - குளியாப்பிட்டிய | 2019.01.25 |

வசந்தா பெரேரா,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

இல. 385, வண. பத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்தை,
கொழும்பு 10.

04-549

1A - G 29792— 42 ( 2019/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.